மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எப்படியாவது அரங்கேற்றத்தைப் பார்த்துத்தான் தீரவேண்டுமென்ற நிலையில் 5 ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கிப் பார்த்திருக்கிறார்கள். அது பெரிய தவறு. ஏனென்றால் பொதுமக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கள்ள டிக்கட் விற்ற கவுண்டரிலே இருந்தவர்களைப் போலீசாரிடம் பிடித்துக் கொடுத்துவிட்டு, அவர்கள் அடுத்த ஆட்டத்திற்குப் போயிருக்கலாம். அதனால் அரங்கேற்றம் எங்கும் போய்விடாது. ஆகவே, பொறுப்புள்ள உறுப்பினர்கள் இவைக் குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்க வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: நாம் கவனம் செலுத்த வேண்டிய வேறு எத்தனையோ கள்ளச் சந்தைகள் இருக்க, இதிலேபோய் நாம் விலைக் காலத்தையும், கருத்தையும் செலுத்த வேண்டுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் கேள்வியில் உறுப்பினர் கவனம் செலுத்தாமல் இருப்பது நல்லது.

## Liquor shops

*210 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the temple lands and premises in which (1) Arrack, (2) Toddy and (3) Liquor shops have been opened in Madras City?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை மாநகரில் கோவில் நிலம் எதிலும் அல்லது கோவில் வளவுகளில் எதிலும் கள்ளுக்கடையோ, சாராயக் கடையோ, மதுக்கடையோ அமைந்திருக்கவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கோயில்கள் ஆகியவற்றுக்கு அருகில் கள், சாராயக் கடைகளைத் திறக்கக் கூடாது என்பதாக விதியிருந்தும் பலயிடங்களில் கடைகளைத் திறந்துவிடுகிறார்கள். பிறகு அரசாங்கத்திற்கு ஆட்சேபணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. வேறு சில கடைக்காரர்கள் வழக்கு தொடருகிறார்கள். ஆகவே கடைகளைத் திறப்பதற்கு முன்னாலேயே இன்னின்ன இடங்களில்தான் திறக்கலாம் என்று சம்பந்தப்பட்ட நகராட்சி மன்றங்களையும், ஊராட்சி மன்றங்களையும் கலந்து முடிவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அடுத்த ஆண்டு ஏலம் விடுவதற்கு முன்பாக நகராட்சிகளில் எந்த எந்த இடத்தில் திறக்கலாம் என்று முடிவு செய்ய இருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** கள்ளுக்கடை, சாராயக்கடை ஏலம் எடுத்தவர்கள் அங்கங்கே சப்-சென்டர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று அனுமதித்திருப்பதால் இப்போது அவர்கள் பரவலாகக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். இதுபோல சப்-சென்டர்கள் திறக்க அனுமதி வழங்காமல் இருப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்த ஆண்டு ஒரு நிபந்தனையாக சப்-சென்டர்கள் வைத்துக்கொள்ள அனுமதிப்பதாக அறிவித்திருந்தோம். ஆகவே, அதனை இந்த ஆண்டு திறக்க முடியாது.

**திருமதி ஜோதிவெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, பள்ளிக்கூடம், ட்யூடோரியல் காலேஜ் போன்றவற்றுக்கு அருகில் லிக்கர் ஷாப் திறக்க அனுமதி வழங்கக் கூடாது என்று இருந்தும் மவுண்டு ரோடில் மவுண்டு ட்யூடோரியல் காலேஜ் அருகிலேயே Liquorshop இருக்கிறதே, இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது ரெப்ரசென்டேஷன் வந்திருக்கிறதா? அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் இதுபற்றி அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. எ. வகாப்:** அடுத்த ஆண்டு நகராட்சிகளைக் கலந்துகொண்டு இடம் நிர்ணயிப்பதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டு நடைமுறையில் பள்ளி வாசலுக்கு அருகில் ஆற்காடு, கும்பகோணம் போன்ற இடங்களில் கள், சாராயக் கடைகள் அமைந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதுபோன்ற இடங்களில் கடைகள் இருக்கக் கூடாது என்பதுதான் சட்டம். மாறாக இதுபோன்ற இடங்களில் அமைந்திருக்கிறது என்றால் அதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அரசாங்கம் பாரபட்சம் இல்லாத முறையில் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. சோணையா:** கள்ளுக்கடை, சாராயக் கடைகளை நாம் ஒவ்வொரு ஆண்டும் ஏலம் விடுகிறோம். இந்த ஆண்டு புதியதாக ஒருவர் ஏலம் எடுத்தால் போன ஆண்டு கடை நடந்த இடத்தை போன ஆண்டு ஏலம் எடுத்தவர் தர மறுக்கிற காரணத்தினால் வேறு இடத்தில் இவர்கள் கடை வைக்க வேண்டியிருக்கிறது. அதுபோல இல்லாமல் ஏலம் விடும்போதே நிரந்தரமாக ஒரு இடத்தில் அவை நடைபெறத்தக்க வகையில் இடத்தை நிர்ணயம் செய்து விடுவார்களா?

*1973 மார்ச் 2]*

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைத்தான் நான் முன்பே சொன்னேன். வரும் ஆண்டில் அதுபோல விடுவதற்குத்தான் உத்தேசித்திருக்கிறோம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** கள், சாராயக்கடை ஏலம் எடுத்தவர்களுக்கு நட்டம் வருகிறது என்று சொல்கிறார்களே, மது அருந்துகிறவர்களுடைய தொகை குறைந்து வருகிறதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. கோ. இளங்கோவன்:** இந்த ஆண்டு கள், சாராயக்கடை ஏலம் எடுத்தவர்கள் சப்-சென்டர்கள் திறப்பதைத் தடுக்க முடியாது என்று சொன்னார்கள். அடுத்த ஆண்டாவது இதுபோல சப்-சென்டர்கள் திறக்கக் கூடாது என்று சொல்வார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கனவே பதில் சொல்லி விட்டார்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மேற்குத் தாம்பரம் பள்ளிவாசலுக்கு அருகில் கள்ளுக்கடை இருக்கிறது. ஒரு சட்ட மன்ற உறுப்பினரே அதில் சம்பந்தப்பட்டிருப்பதால் அதனை அந்த இடத்தைவிட்டு மாற்ற முடியாது என்கிறார்களே, இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** முன்பே சொன்னேன். இதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று பார்க்காது, பாரபட்சமின்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** சப்-சென்டர்கள் திறக்க அனுமதித்திருப்பதால் ஒருவர் மற்றொருவருடைய ஏரியாவில் கடை திறக்கிற காரணத்தினால் பல சச்சரவுகள் அவர்களுக்குள்ளேயே ஏற்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதுபோன்ற சச்சரவு குறித்து அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : : Do these restrictions apply to wholesale shops located very near schools?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மொத்த வியாபாரமாக இருந்தாலும் சில்லறை வியாபாரமாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் சட்டம் ஒன்றுதான்.

**திரு. கே. என். குமாரசாமி:** கள்ளுக்கடை, சாராயக் கடைகளை ஏலம் விடும்போது இன்ன இடத்தில்தான் வைக்கவேண்டும் என்று சொன்னாலும் அதை அவர்கள் மீறி கடைகள் வைக்கிறபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** குறிப்பிட்ட இடம் என்று வைத்து ஏலம் விடுவதில்லை. குறிப்பிட்ட ஏரியாவுக்காக ஏலம் விடுகிறோம். விதிகளை மீறினால் சட்டப்படி அவர்கள் உரிமத்தை ரத்து செய்ய முடியும்.

* 211 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state:—

(a) whether it is a fact that the Collector of Madurai has ordered an enquiry into the location of wine shops at the place where Gandhiji stayed at Madurai City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) 1921 செப்டம்பரில் காந்தியடிகள் தான் அதுவரை வழக்கமாக அணிந்து வந்த முழு ஆடைகளை விடுத்து அரை உடை அணியத் தொடங்கிய கட்டிடத்தில் மதுக்கடை திறப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற புகார் வரப்பெற்றதன் மேல், அதுபற்றி விசாரணை செய்யும்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டார். மதுக்கடை அமைப்பதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ள இடம், மதுரை, மேற்கு மாசிவீதி 251 ஆம் என் கட்டிடமாகும். இந்த இடத்தில் காந்தியடிகள் தங்கவில்லை என்றும் மதுரை, மேற்கு மாசிவீதி 251 A ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில்தான் அவர் தங்கினார் என்றும் அந்த இடத்தை கதர் விற்பனை நிலையம் அமைப்பதற்காக தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தினால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது என்றும் விசாரணையிலிருந்து தெரியவந்தது.

THIRU N. DENNIS: Will the Government ban opening of liquor shops in all places which people venerate?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏற்கனவே பதில் சொல்லும்போது விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.